[10th November 1965

(*b*) if so, the reply received therefor?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The laying of a new broad guage line from Salem to Dindigul (via) Karur and conversion of Dindigul-Tuticorin (via) Madurai line into broad guage including the short link from Maniyachi to Tirunelveli have been recently recommended to the Government of India for implementation during the Fourth Plan period. Their decision is awaited.

திரு. சா. கணேசன் : அப்படியானல் திண்டுக்கல்லிலிருந்து கோவை போகிற லேனையும்—இதோடு இணைந்ததாக இருப்பதால்—பிராட் கேஜ்ஜாக மாற்றுவதற்கான ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அது இப்பொழுது இல்லை.

திரு. ர. ஜீவரத்னம் : வேலூரிலிருந்து ஆற்காடு, கலவை, செய்யாறு வழியாகக் காஞ்சீபுரத்திற்கு ஒரு ரயில் பாதை போட சர்வே செய்யப்பட்டு, பின்னல் அது நிறுத்தப்பட்டது. நெருக்கடியை முன்னிட்டாவது அதை அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்ய முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனியாகக் கேள்வி போட்டால், கவனித்துப் பதில் சொல்லலாம்.

*** 435 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

9-30 a.m. (அ) திண்டிவனம் ரயில்வே நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கோரி இம்மாநில அரசு மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் செய்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : திண்டிவனம் பெரிய முனிசிபல் நகரம். கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் கட்டப்பட்ட திண்டிவனம் ரயில்வே நிலையம் இதுவரை எந்த வித வசதியும் செய்யப்படாமல் இருக்கிறது. ஆகவே, அதை உடனடியாக விரிவு படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : ரயில்வே நிர்வாகம் தங்களிடம் உள்ள நிதி நிலைமைக்கேற்ப எந்த எந்த ரயில்வே நிலையங்களை விரிவுபடுத்த வேண்டுமோ அவற்றை விரிவுபடுத்தி வருகிறார்கள். நாமும் இன்ஃபார்மலாக இந்த இடங்களுக்குச் சில வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

10th November 1965]

புலவர் கா. கோவிந்தன் : செய்யாறு, வந்தவாசி ஆகிய தாலுக்காக்களில் இருக்கிற மக்கள் திண்டிவனம் வந்துதான் ரயில் ஏற வேண்டிய நிலை இருக்கின்றனர். இங்கே போட்மெயில், தூத்துக்குடி ரயில்கள் தான் நிற்கின்றன. திருநெல்வேலி, திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்கள் நிற்பதில்லை. அவற்றையும் நிறுத்த வேண்டும் என்பதாக மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : எல்லா ஸ்டேஷன்களிலும், எல்லா ரயில்களும் நிற்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. சில வண்டிகள் வேகமாகச் செல்லவேண்டியிருப்பதால் அடிக்கடி பல ஸ்டேஷன்களில் நிற்க முடியாது.

* 436 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து விழுப்புரம், திருச்சிராப்பள்ளி வழியாக திருநெல்வேலி செல்லும் ரெயில் பாதையை அகலப்பாதையாக (Broad gauge) மாற்ற வேண்டுமென்று கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு ஏதேனும் விண்ணப்பம் செய்ததா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) & (இ) மதுரை வழியாகத் திருச்சியிலிருந்து தூத்துக்குடிக்கும், திருநெல்வேலிக்கும் பிராட் கேஜ் ரயில்பாதை அமைக்கும் வேலையை உடனடியாக எடுத்துக் கொள்ளும்படியும், சென்னையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் மீட்டர் கேஜ் பாதையை பிராட் கேஜ் பாதையாக மாற்றி அமைக்கும் வேலைக்கு அதற்கடுத்தாற்போல் முக்கியத்துவம் அளிக்கும்படியும் இந்திய அரசாங்கத்திற்கு எழுதப்பட்டது. தற்போதுள்ள மீட்டர் கேஜ் பாதையை பிராட் கேஜ் பாதையாக மாற்றுவது பற்றி, வண்டிப் போக்குவரத்துத் திறனுக்கேற்ப அவ்வப்போது ஆலோசிக்கப்படும் என்று இந்திய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி-தூத்துக்குடி மார்க்கம் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் முன்னோடித் திட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளது.

Irrigation Projects

* 437 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the details of Irrigation Projects that are under negotiations with the neighbouring State Governments; and

(*b*) the present stage of the negotiations?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The question of utilisation of the West flowing rivers in Madras State was discussed between the Ministers of the Madras and Kerala States in July 1963, when it was agreed that the Engineers of the two States should examine the availability of supplies. The Chief Engineer (Irrigation) carried out his preliminary investigation and submitted his proposals. Copies of this report have been sent to the Government of Kerala.

The reply of the Government of Kerala in the matter is awaited